பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

21 01 2025 **TUESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. திரிபுரா, மேகாலயா, மணிப்பூர் மாநிலங்கள் உருவான தினத்தையொட்டி குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

2. நக்சலைட்டுகள் இல்லாத இந்தியாவை உருவாக்குவதில் பாதுகாப்புப்படையினர் பெரும் வெற்றி பெற்றிருப்பதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

3. பிரயாக்ராஜ் மகா கும்பமேளா கலை நிகழ்ச்சிகளில், தஞ்சாவூர் தென்னக பண்பாட்டு மையத்தை சேர்ந்த கலைஞர்கள் பங்கேற்க உள்ளனர்.

4. உலக சுகாதார அமைப்பிலிருந்து அமெரிக்கா விலகுவதாக அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

5. இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் பிரிவு தகுதிச்சுற்றில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி வெற்றி பெற்றுள்ளார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ----*</u>

**<<<<<<>>>>>**

திரிபுரா, மேகாலயா, மற்றும் மணிப்பூர் மாநிலங்கள் உருவான தினத்தையொட்டி, குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் அம்மாநிலங்களின் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள செய்தியில், இந்த மூன்று மாநிலங்களின் மக்கள் அமைதியாக வாழவும், அவர்களது எதிர்காலம் வளமானதாக அமையவும் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நாட்டின் வளர்ச்சிக்கு அம்மாநில மக்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இம்மாநிலங்கள் வேற்றுமையில் ஒற்றுமை உணர்வுக்கு எடுத்துக்காட்டாக திகழ்வதுடன், நாட்டின் கலாச்சார பாரம்பரியத்தை பிரதிபலிப்பதாகவும் கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், நாட்டின் வளர்ச்சிக்காக மணிப்பூர் மக்கள் ஆற்றிய பங்களிப்பால் ஒட்டுமொத்த நாடும் பெருமிதம் அடைவதாக குறிப்பிட்டுள்ளார்.

மேகாலயா மாநிலத்தின் இயற்கை அழகும், அம்மாநில மக்களின் தொழில் திறனும் போற்றத்தக்கது என்று கூறியுள்ள பிரதமர், வருங்காலத்தில் அம்மாநிலம் தொடர்ந்து வளர்ச்சியடைய பிரார்த்திப்பதாக தெரிவித்துள்ளார்.

நாட்டின் முன்னேற்றத்தில் திரிபுராவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது என்றும் அவர் கூறியுள்ளார்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா உள்ளிட்ட பல்வேறு தலைவர்களும் இம்மாநிலங்களின் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**<<<<<<>>>>>**

சட்டீஸ்கர் மாநிலம் **Gariaband** மாவட்டத்தில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையில், இதுவரை 16 நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

ஒடிஷா எல்லையையொட்டிய **'Kulharighat** வனப்பகுதியில், தீவிரவாதிகள் அதிக அளவில் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலின்பேரில், மத்திய ரிசர்வ் காவல்படை, சட்டீஸ்கர் மற்றும் ஒடிஷா மாநில காவல்துறையினர் கூட்டாக அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அப்போது நடைபெற்ற துப்பாக்கிச்சண்டையில் ஏற்கனவே இரண்டு பெண் தீவிரவாதிகளின் உடல்கள் கண்டெடுக்கப்பட்ட நிலையில், தற்போது மேலும் 14 தீவிரவாதிகளின் உடல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்களில், நக்சலைட் இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ஜெய்ராம் என்கிற சல்பதியும் ஒருவர் என்றும், அவரது தலைக்கு ஒரு கோடி ரூபாய் சன்மானம் அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் பாதுகாப்புப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கை குறித்து சமூக வலைதளத்தில் கருத்து தெரிவித்துள்ள மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, நக்சலைட்டுகள் இல்லாத இந்தியாவை உருவாக்குவதில் நமது பாதுகாப்புப்படையினர் பெரும் வெற்றியடைந்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இது, நக்சலைட்டுகளுக்கு ஏற்பட்ட பின்னடைவு என்றும், நக்சலைட்டுகளின் செயல்பாடு விரைவில் முழுமையாக ஒழிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல், பெல்ஜியம் நாட்டின் வெளியுறவு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் **Bernard Quintin**–வுடன் இருதரப்பு ஒத்துழைப்புகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பிரஸ்ஸெல்ஸ் நகரில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது, பரஸ்பர பலன் அளிக்கும் வகையில், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் குறித்தும் இரு அமைச்சர்களும் விவாதித்தனர்.

கடந்த 2023-2024-ஆம் ஆண்டு காலக்கட்டத்தில், இந்தியா – பெல்ஜியம் இடையே சுமார் 15 பில்லியன் டாலருக்கும் அதிகமாக வர்த்தகம் நடைபெற்றிருப்பதுடன், பெல்ஜியம் நாட்டில் இருந்து இந்தியாவில் சுமார் நான்கு பில்லியன் டாலர் அந்நிய நேரடி முதலீடு மேற்கொள்ளப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

<<<<<<>>>>>

உலக பொருளாதார மன்ற கூட்டத்தின் ஒருபகுதியாக, சுவிட்சர்லாந்தின் டாவோஸில் அமைக்கப்பட்டுள்ள இந்திய அரங்கை, மத்திய உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர் திரு சிராக் பாஸ்வான், திறன் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு ஜெயந்த் சௌத்ரி ஆகியோர் இன்று திறந்துவைத்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு சிராக் பாஸ்வான், இந்தியாவின் வளர்ச்சி ஒட்டுமொத்த உலகிற்கும் பலன் அளிக்கும் என்றார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, இந்தியாவை உலகின் உணவு கிண்ணமாக மாற்ற நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதனைத்தொடர்ந்து, திரு பாஸ்வான் கோகோ கோலா நிறுவனத்தின் தலைமை செயல்பாட்டு அதிகாரி திரு ஹென்ரிக் ப்ரைவுனுடன் ஆலோசனை நடத்தினார்.

அப்போது, இந்தியாவில் உணவு பதப்படுத்துதல் தொழில்துறையை வலுப்படுத்த முடிவு செய்யப்பட்டது.

**<<<<<<>>>>>**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்…

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளா கலை விழாவில் தஞ்சாவூரில் உள்ள தென்னக பண்பாட்டு மையம் சார்பில் 120-க்கும் மேற்பட்ட நாட்டுப்புற கலைஞர்கள் பங்கேற்று கலை நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளதாக அந்த மையத்தின் நிர்வாக அலுவலர் திரு சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

*(வாய்ஸ் பைட் - சீனிவாசன் - 42 செகண்ட்ஸ்)*

இதனிடையே, கும்பமேளாவில் பங்கேற்பதற்காக பிரயாக்ராஜ் சென்றுள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் திரு ராம்நாத் கோவிந்த், அங்கு அமைக்கப்பட்டுள்ள பல்வேறு முகாம்களையும் பார்வையிட்டு சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

இதுவரை திரிவேணி சங்கமத்தில் எட்டு கோடியே 81 லட்சத்திற்கும் அதிகமானோர் புனித நீராடியிருப்பதாக உத்தரப்பிரதேச அரசு தெரிவித்துள்ளது.

இன்று காலையில் மட்டும் சுமார் 16 லட்சம் பேர் நீராடியுள்ளனர்.

மகா கும்பமேளாவை பிரபலப்படுத்தும் விதமாக, அயோத்தி ராமர் கோவில் அருகே மகா கும்பமேளா செல்ஃபி மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

**<<<<<<>>>>>**

தில்லியில் பிஜேபி ஆட்சிக்கு வந்தால், போட்டித்தேர்வுகள் எழுதும் இளைஞர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படும் என அக்கட்சி உறுதியளித்துள்ளது.

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிஜேபி தேர்தல் அறிக்கையின் இரண்டாம் பகுதியை வெளியிட்டு பேசிய அக்கட்சியின் மூத்த தலைவர் திரு அனுராக் சிங் தாகூர், இதனை தெரிவித்தார்.

மேலும், அரசு கல்வி நிறுவனங்களில், ஏழை மாணவர்களுக்கு மழலையர் வகுப்பு முதல், முதுநிலை பட்டப்படிப்பு வரை இலவச கல்வி வழங்கப்படும் என்றும் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆட்டோ டாக்சி ஓட்டுநர்களுக்கு ஆயுள் காப்பீடாக பத்து லட்சம் ரூபாயும், விபத்து மற்றும் வாகன காப்பீடாக ஐந்து லட்சம் ரூபாயும் வழங்கப்படுவதுடன், அவர்களது குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>**

உலக சுகாதார அமைப்பிலிருந்து விலகிக்கொள்வதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அந்நாட்டின் புதிய அதிபராக பொறுப்பேற்றுள்ள திரு டொனால்டு ட்ரம்ப் இதற்கான உத்தரவில் கையெழுத்திட்டுள்ளார்.

140 கோடிக்கும் அதிகமான மக்கள் தொகையை கொண்ட சீனா, 39 மில்லியன் டாலர் மட்டுமே உலக சுகாதார அமைப்புக்கு செலுத்திவரும் நிலையில், அதைவிட குறைவான மக்கள் தொகை கொண்ட அமெரிக்கா 500 மில்லியன் டாலர் செலுத்துவது தேவையற்றது என்பதால் இந்த முடிவை மேற்கொண்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

பிரிக்ஸ் அமைப்பில் உறுப்பினராக உள்ள நாடுகள் அமெரிக்க டாலர் பயன்பாட்டை குறைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டால், சம்பந்தப்பட்ட நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 100 சதவீத வரி விதிக்க நேரிடும் என்றும் திரு ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

மேலும், கடந்த 2021-ஆம் ஆண்டு அமெரிக்க நாடாளுமன்ற வளாகத்தில் ஏற்பட்ட வன்முறையில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு மன்னிப்பு அளித்து அவர்களுக்கு தண்டனையை குறைக்கவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையே, அமெரிக்க வெளியுறவு அமைச்சராக திரு **Marco Rubio** நியமிக்கப்பட்டிருப்பதற்கு அந்நாட்டு செனட் சபை ஒப்புதல் அளித்துள்ளது.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் போட்டி ஜகார்தாவில் இன்று தொடங்கியது.

இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு தகுதிச்சுற்றில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி 21-7, 21-15 என்ற செட் கணக்கில் கிடாம்பி ஸ்ரீகாந்தை வீழ்த்தினார்.

இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ரங்கி ரெட்டி – சிராக் ஷெட்டி இணை இன்று தைவானின் **Chen Zhi Ray – Lin Yu Chi** இணையை எதிர்கொள்கிறது.

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அஸ்வினி பொன்னப்பா – தனீஷா கிரஷ்டோ இணை, தாய்லாந்து இணையை எதிர்கொள்கிறது.

---------------

நெதர்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் போட்டியின் 3 -வது சுற்றின் முடிவில் இந்தியாவின் பிரஞ்யானந்தா முதலிடத்தில் உள்ளார்.

---------------

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் உத்திரப்பிரதேச அணி இன்று **Gonasika** அணியை எதிர்கொள்கிறது.

---------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை அணி – மோகன் பஹன் அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி இரவு மணி 7.30–க்கு தொடங்குகிறது.

<<<<<<>>>>>